முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

**O.S. No. 46/2021**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் திங்கள்கிழமை

1969 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பி.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்லத்துரை | தந்தையார் பெயர் | தங்கராசு |
| கிராமம் | சங்கேந்தி | வட்டம் | முத்துப்பேட்டை |
| தொழில் | | வயது | 52 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கினை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கருப்பையா பொன்னு. என்னை சாட்சி சொல்வதற்காக கருப்பையாவின் மருமகள் சந்திரா நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். சந்திரா சங்கேந்தி, முத்துப்பேட்டை தாலுக்காவில் வசித்து வருகிறார். சந்திராவை எனக்கு 35 வருடங்களாக தெரியும். நான் மேற்படி சந்திரா வசிக்கின்ற வீட்டிலிருந்து 3 வது வீட்டில் வசித்து வருகிறேன். நான் எனது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:36:54 +0530

பிரமான வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் 3 வது வரியிலிருந்து இரண்டாவது பக்கத்தில் 8 வது வரி வரை கூறியுள்ளவாறு எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றால் தவறு. நான் பிரமான வாக்குமூலத்தில் கூறியுள்ளது போல் எந்த உயிலும் முதல் பிரதிவாதி பெயரில் தாவா சொத்துக்களை பொறுத்து எழுதி வைக்கவில்லை என்றால் தவறு. நான் 2 ம் பிரதிவாதியை சுமார் 35 வருடங்களாக தெரியும் என்ற காரணத்தினாலும், அவரது வீட்டிற்கு அருகே நான் வசித்து வருவதாலும், அவரும் அவருடைய கணவர் பாலசுப்பிரமணியனும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதிவாதிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:36:59 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

**O.S. No.46/2021**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் திங்கள்கிழமை

1969 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பி.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சித்தார்த்தன் | தந்தையார் பெயர் | சுந்தர் |
| கிராமம் | திருத்துறைப்பூண்டி | வட்டம் | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | | வயது | 68 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் பிரதிவாதிகளை சுமார் 30 ஆண்டுகளாக தெரியும். 2 ம் பிரதிவாதி சந்திரா நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரி. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் 2 வது பத்தியில் 5 வது வரியிலிருந்து இரண்டாம் பக்கத்தில் 15 வது வரி வரை கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் தவறு. நான் பிரமான

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:37:05 +0530

வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 15.04.2003 அன்று வாதிகளின் தகப்பனார் தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித உயிலும் 1ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைக்கவில்லை என்றாலும், பிரதிவாதிகளை எனக்கு பல ஆண்டுகளாக தெரியும் என்ற காரணத்தினால் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க அவர்களுக்கு சாதகமாக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:37:10 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

O.S. No.46/2021

23.03.2026

பி.**சா. 12- செல்லத்துரை**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தானது எந்த வருடம் வாங்கப்பட்டது என்ற விபரம் ஏதும் எனக்கு தெரியாது. என் மாமனார் எந்த வருடம் இறந்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. என் கணவர் ராமதாஸ், கொழுந்தனார் ரவிச்சந்திரன், என் நாத்தனார் கலைச்செல்வி ஆகியோர் என் மாமனாருக்கு வாரிசுகள். என் மாமியார் 2012 ல் தான் இறந்தார். 1 ம் பிரதிவாதி கலைச்செல்வியுடன் என் மாமியார் என் மாமனார் இறந்ததிலிருந்து இருந்து வந்தார். என் மாமியார் இறக்கும் வரை நான் வழக்குச் சொத்தில் எவ்வித பங்கும் கோரவில்லை என்றால் சரி. என் கணவர் 2024 ம் ஆண்டு இறந்துவிட்டார். அதன் பிறகு தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. வாதி புவனேஸ்வரி என் கொழுந்தனார் ரவிச்சந்திரனின் மனைவி ஆவார். அவரது மகள் தான் வினோதினி. 21.02.2010 ம் தேதி என் கணவர் வெளிநாட்டில் இருக்கும் போது வழக்குச் சொத்தில் என் கணவரின் பாகத்தினை அவருக்காக நான் விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:37:17 +0530

ரூ.2.00.000/- கலைச்செல்வியிடமிருந்து அட்வான்ஸ் வாங்கியள்ளேன் என்றாலும், அதன்பின்னிட்டு ரூ.1,00,000/- ஆக மொத்தம் மூன்றுலட்சம் இந்த சொத்திற்காகவும், ரூபாய் ஒரு லட்சம் கடனாகவும் மொத்தம் 4 லட்சம் கலைச்செல்வியிடம் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றாலும், தற்சமயம் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தவறு. அந்த உண்மை எல்லாம் தெரியும் என்பதால் தான் என் மாமியார் மற்றும் கணவரின் இறப்பு வரை காத்திருந்து அதன் பிறகு நானும் என் ஓப்படியாரும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், அதனால் எனக்கு இந்த வழக்குச் சொத்தில் பாகம் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் தவறு. நான் இந்த வழக்குச் சொத்தில் கூட்டு பங்குதாரர் என்ற உரிமையை இழந்துவிட்டேன் என்றாலும், எனக்கு சொத்துரிமை கேட்கும் உரிமை அற்று போய் 25 வருடம் ஆகிறது என்றாலும் தவறு. காலாவதி சட்டத்தின் கீழ் எனக்கு உரிமை பாதிக்கப்பட்டுள்ளதால் எனக்கு இந்த வழக்குச் சொத்தில் பாகம் ஏதும் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும், என்னுடைய 1/3 பாகம் கலைச்செல்விக்கு சேரக்கூடியது என்றாலும் தவறு. அதனால் நான் சட்டப்படியான ouster என்றாலும், அதனால் வழக்குச் சொத்தில் சொத்துரிமை இல்லை

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:37:23 +0530

என்றாலும், புவனேஸ்வரியும், 1ம் பிரதிவாதியுமே சட்டப்படி உரிமையுள்ளவர்கள் என்றாலும் தவறு. நான் என் மாமனார் இறந்தபிறகு இந்த சொத்தில் கூட்டு அனுபவத்தில் இல்லாததால் வழக்குச் சொத்தில் 1/3 பாகம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:37:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.